**<u>1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>**
**<u>O.S.No. 428/2024</u>**

24.07.2026 வா.சா.1 திருமதி.சுந்தரி

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**<u>3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. முருகன் பெயரில் உள்ள நகை கடனை எந்த தேதியில் வங்கியில் செலுத்த சொன்னார்கள் என்ற விபரத்தை பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் தேதி குறிப்பிட்டு சொல்லாமல் தற்போது சொல்லியதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நகையை வங்கி ஏலம் விடுவதை தடுக்க வேண்டும் என்பதற்காக தான் வங்கியில் பணத்தை செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். பணம் கட்டவில்லை என்றால் நகை ஏலத்திற்கு போய்விடும் என்பதால் கட்டினேன்.
2. எனது தாயார் நம்பி நாச்சியாரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் எனது அம்மா இரண்டாவது மனைவி என்பதால் அவரை வாரிசு இல்லை என நீதிமன்றம் சொல்லிவிட்டதால் அவரை தரப்பினராக சேர்க்கவில்லை. 2 வது மனைவியான எனது அம்மாவை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவேண்டும் என்றும் அவர் இந்த வழக்கின் நடவடிக்கைகளை தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் சரியல்ல. எங்களுக்கு பரிகாரம் கிடைப்பதில் எனது அம்மாவிற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை.
3. வீரமணிகண்டன் என்ற ஐயப்பன் எந்த தேதியில் இறந்தார் என்று நான் பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். அவர் திருமணம் ஆகாமல் இறந்து விட்டதால் அவரை நீதிமன்றம் வாரிசு விபரத்தில் சேர்க்கவில்லை. தீர்ப்பையும் வைத்துள்ளேன். முருகன் என்பவரின் அப்பா, அம்மா உயிருடன் உள்ளார்களா என்றால் இல்லை. முருகன் என்பவரின் அப்பா, அம்மா இறப்பு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் அவர்கள்

எனது அப்பாவின் சிறு வயதிலேயே இறந்து விட்டார்கள். மேற்படி நபர்களின் இறப்பு சான்றிதழை பெறுவதற்கு நானும் எந்த முயற்சியும் செய்யவில்லை என்றால் சரிதான். உரிய ஆவணங்கள் தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY

Deposition Uploaded on 24.07.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.07.24 16:12:18 +0530

**1 வது கூடுதல் மாவட்ட**
**உரிமையியல் நீதிபதி**
**திருநெல்வேலி**